**<u>நாள்-01.08.2022</u>**

அ.வ.எண். 198/2021, PW-2, திரு. பாண்டியன், த/பெ. சின்னகருப்பன்
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆட்டோ டிரைவராக வேலை பார்த்து வருகிறேனா என்றால் ஆம். இவ்வழக்கின் வாதியின் பெயர் என்ன என்றால் நீலாவதி என்பவர்தான் வாதி. அவர் செல்வம் என்பவரின் பெயரில் வழக்கு போட்டுள்ளார். வாதி நீலாவதி காரைக்குடியில் எந்த இடத்தில் குடியிருந்து வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது சொந்த ஊர் லேணாவிளக்கு. லேணாவிளக்கு புதுக்கோட்டையிலிந்து சமார் 14 கி.மீ தூரம் இருக்கும். நான் பி.எஸ்ஸி வரை படித்துள்ளேன். லேணாவிளக்கிலிருந்து கீழாநிலைக்கோட்டைக்கு எந்த வழியாக செல்ல வேண்டும் என்றால் ராயவரம் வழியாக போக வேண்டும். ராயவரத்திலிருந்து கீழாநிலைகோட்டைக்கு 14 கி.மீ தூரம் இருக்கும். வாதியை எனக்கு 7 வருடங்களாக தெரியும். வாதி நீலாவதி என்ன தொழில் செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி செல்வத்தை வழக்கிற்கு முன்னரோ, பின்னரோ பார்த்துள்ளேனா என்றால் வழக்கிற்கு முன் ஒரு முறை அவரை பார்த்துள்ளேன். பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார், எங்கு இருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியை பற்றிய முழுவிபரங்கள் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே எத்தனை வருடங்களாக கொடுக்கல், வாங்கல் இருந்து வந்தது என்ற விபரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். வாதி நீலாவதி என்ன வட்டிக்கு பணம் கொடுப்பார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஒரு வட்டிக்கு பணம் கொடுப்பார். நான் வாதியிடம் நேரடியாக கடன் ஏதேனும் பெற்றிருக்கிறேனா என்றால் இல்லை. நான் வட்டிக்கு வாதியிடமிருந்து பணம் பெறாதபோது எவ்வாறு ஒரு வட்டி என்று சொல்கிறேன் என்றால் நான் வேலை பார்க்கும் இடத்தில் வாதி ஒரு வட்டிக்கு பணம் கடன் கொடுப்பார் என்று பேசிக்கொண்டதை கேள்விப்பட்டு சொல்கிறேன். பொதுவாக பணம் அதிகமாக இருந்தால் அதை வீட்டிலேயே கைவசம் வைத்துக்கொள்ளாமல் வங்கியில் வைத்துக்கொள்வார்கள் என்றால் சரிதான். எந்த தேதியில் எத்தனை மணிக்கு வாதி நீலாவதி வீட்டில் பிரதிவாதி செல்வத்தை நான் பார்த்தேன் என்றால் 04.12.2019ம் தேதி மதியம் 2.30 மணியளவில் பார்த்தேன். வாதி நீலாவதி வீட்டிற்கு அருகில் வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. நான் வாதி நீலாவதி வீட்டிற்கு மதியம் சமார் 2.00 மணியளவில் போனேன். நான் என்ன வேலையாக

வாதியின் வீட்டிற்கு சென்றேன் என்றால் வாதி என்னிடம் தெரிந்தவர் ஒருவர் பணம் கேட்க வருவார், அதில் நீங்கள் சாட்சியாக இருந்து கையொப்பம் போடவேண்டும் என்று சொல்லி என்னை அழைத்திருந்தார். அதன் பேரில் நான் வாதியின் வீட்டிற்கு சென்றிருந்தேன். வாதியின் ஊரிலேயே வேறு யாரையாவது சாட்சிக்கு அழைத்துக்கொள்ளலாமே என்று வாதியிடம் சொன்னேனா என்றால் இல்லை. பிரதிவாதி செல்வம் எந்த தேவைக்காக வாதியிடம் பணம் கேட்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவருடைய கடன் பிரச்சினைக்காக பணம் வேண்டும் கேட்டார். வெளிக்கடனை பிரச்சினையை தீர்ப்பதற்காகத்தான் கடன் கேட்டதாக வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டில் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராமிசரி நோட்டு எழுதிய தேதியில் அதில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டதா என்றால் ஒட்டப்பட்டிருந்தது. எத்தனை ரூபாய்க்கு ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டிருந்தது என்றால் ஒரு ரூபாய் ஸ்டாம்ப் இரண்டு ஒட்டப்பட்டிருந்தது. பிரதிவாதி செல்வம் பிராமிசரி நோட்டில் கையெழுத்தும் மட்டும்தான் போட்டுக்கொடுத்தார் என்றால் அவர் கைரேகையும் வைத்தார். பொதுவாக பிராமிசரி நோட்டில் கையெழுத்து போட்டுக்கொடுத்தால் கைரேகை வைக்கமாட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் பிராமிசரி நோட்டு எழுதிய தேதியல் எந்த ஒரு ரெவின்யூ ஸ்டாம்ப் -ம் ஒட்டாமல் வெறும் கைரேகை மட்டும் பெறப்பட்ட பிராமிசரி நோட்டு என்றால் சரியல்ல. ரெவின்யூர் ஸ்டாம்ப் ஒட்டித்தான் கையெழுத்து வாங்கினார்கள். பிராமிசரி நோட்டில் LTI என்றுஎழுதப்பட்டுள்ளதா அல்லது LTF என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் LTF என்று எழுதப்பட்டுள்ளது. அதை எழுதியது யார் என்றால் மற்றொரு செல்வம் என்ற ஒரு நபர்தான் எழுதினார். 500 ரூபாய் நோட்டுக்களாக பணம் கொடுத்தார்கள். எவ்வளவு ரூபாய் கொடுத்தார்கள் என்றால் 10 லட்சம் பணம் கொடுத்தார்கள். நான் சொல்லும் தேதியில் 10 லட்ச ரூபாய் தொகையை வாதி, பிரதிவாதியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு வேண்டிய நபர் என்ற முறையில் 10 லட்சம் பிரதிவாதிக்கு வாதி பணம் கொடுத்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏதும் எழுதி நிரப்பப்படதா ஒரு பிராமிசரி நோட்டில் வாதி, இந்த பிரதிவாதியின் கையெழுத்து பெறாமல் கைரேகை மட்டுமே பெறப்பட்டு, அதன் பின்னர் பின் யோசனையாக அதில் ரெவின்யூர் ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு, அதில் செல்வம் என்ற பிரதிவாதியின் கையொப்பம் போர்ஜரியாக போடப்பட்டிருக்கிறது என்றாலும், அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் 04.12.2019ம் தேதி வாதியின் வீட்டிற்கு நான் போகவில்லை என்றாலும், பிரதிவாதி அங்கு வரவில்லை என்றாலும், அவர் 10 லட்சம் பணம் கடனாக

பெறவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி செல்வம் அவருக்கு சொந்தமான எந்த சொத்து குறித்து வாதியிடம் என்ன பத்திரம் கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் ஒரு பத்திரம் கொடுத்தார், அது எந்த சொத்துக்குரியது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி கொடுத்ததாக சொல்லும் பத்திரம் என் முன்னிலையில் கொடுக்கப்பட்ட பத்திரம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி, வாதியிடம் 2019ம் வருடம் மே மாதத்தில் 3 லட்சம் பணம் கேட்டு, வாதி 2.50 லட்சம் பணம் கொடுத்தார் என்றாலும், அந்த சமயத்தில் பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட பத்திரம் தான் அது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த 2.50 லட்சத்தில், ஒன்றரை லட்சம் ஏற்கனவே பிரதிவாதியால் திருப்பி கொடுக்கப்பட்டதுபோக மீதமுள்ள 1 லட்சத்தை அவர் நீதிமன்ற உத்தரவின்படி நீதிமன்றத்தில் செலுத்தியிருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த 2.50 லட்சம் கொடுக்கல், வாங்கல் பற்றி வாதி என்னிடம் சொல்லியிருக்கிறாரா என்றால் இல்லை. நான் வாதிக்காக இந்த வழக்கில் பார்க்காத ஒன்றை பார்த்ததாக சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.